# IX-விலங்குகளின் உறுப்பு மண்டலங்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1)கீழ்காண்பனவற்றில் எது உமிழ்நீர் சுரப்பி இல்லை ?

அ) நாவடிச் சுரப்பி ஆ) லாக்ரிமால்

இ) கீழ்தாடைச் சுரப்பி ஈ) மேலண்ணச் சுரப்பி

2)மனிதனின் இரைப்பையில் பெரும்பாலும் செரிப்பவை ___ ஆகும்.

அ) கார்போஹைட்ரேட்கள் ஆ) புரதங்க ள்

இ) கொழுப்பு ஈ) சுக்ரோஸ்

3)மூச்சுக்குழலின் துளைக்குள் உணவானது நுழைவதைத் தடுப்பது ____ ஆகும்.

அ) குரல்வளை மூடி ஆ) குரல்வளை முனை

இ) கடின அண்ணம் ஈ) மிருதுவான அண்ணம்

4)சிறுநீரகத்தின் அடிப்படைச் செயல் அலகு ____ ஆகும்.

அ) குடலுறுஞ்சிகள் ஆ) கல்லீரல்

இ) நெஃப்ரான் இ) நியூரான்

5)சிறுநீரகக்குழாய்பித்த நீர் ___ செரிக்க உதவுகிறது.

அ) புரதங்கள் ஆ) சர்க்கரை

இ) கொழுப்புகள் ஈ)கார்போஹைட்ரேட்டுகள்

6)கீழ்க்காண்பனவற்றில் எது வியர்வையின் உட்கூறு இல்லை?

அ) யூரியா ஆ) புரதம்

இ) நீர் ஈ) உப்பு

7)ஆண்களில் சிறுநீரையும் விந்தையும் கடத்துவதற்கான பொதுவான பாதை ஆகும்.

அ) சிறுநீரகக்குழாய் ஆ) சிறுநீர்ப்புறவழி

இ விந்துக்குழாய் ஈ) விதைப்பை

LIVEWORKSHEETS

8)கீழ்காண்பனவற்றில் எது பெண் இனப்பெருக்க மண்டலத்தில் காணப்படாத பகுதி?

அ) அண்டம் ஆ) கருப்பை

இ) விந்தகம் ஈ) அண்டக்குழாய்

## II. கோடிட்ட இடங்களை நிரப்பு

9) சிறுகுடலோடு இரைப்பை இணையும் பகுதி ____________ ஆகும்.

10) உமிழ்நீரோடு உணவினை கலக்குவதற்கு பயன்படும் தசையாலான, உணர்வு உறுப்பு ________ ஆகும்.

11) கல்லீரலால் சுரக்கப்படும் பித்தநீர் தற்காலிகமாக _____________ ல் சேமித்து வைக்கப்படுகிறது.

12) உணவுப் பாதையில் மிகவும் நீளமான பகுதி _____________ ஆகும்.

13) மனித உடலானது ___ வெப்பநிலையில் இயல்பாக செயல்படுகிறது.

14) பெண்களின் உடலிலுள்ள மிகப்பெரிய செல் ____________ ஆகும்.

15)இரைப்பையில் சுரக்கும் அமிலம்______________________________

கருமுட்டை 37C பைலோரஸ்

பித்தப்பை நாக்கு சிறுகுடல்

ஹைட்ரோகுளோரிக் அமிலம்

**பொருத்துக**

| | |
|---|---|
| 16)தோல் | சிறுநீர் |
| 17)நுரையீரல் | வியர்வை |
| 18)பெருங்குடல் | கார்பன்-டை-ஆக்சைடு |
| 19)சிறுநீரகங்கள் | செரிக்காத உணவு |
| 20)ஆண்கள் | விந்தகம் |

LIVEWORKSHEETS